பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 பங்குனி 05 சனிக்கிழமை 19.03.2022 கதிர் 02

## மீளவும் எகிறும் பஸ் கட்டணம்

அடுத்த மூன்று மாத காலத்துக்குள் பஸ் கட்டணம் மீண்டும் அதிகரிக்கக்கூடும்.

இதன்படி 25 வீதத்தால் பஸ் கட்டணம் உயரும் எனவும், ஆரம்பக் கட்டணமாக 25 அல்லது 30 ரூபா நிர்ணயிக்கப்படும் எனவும் தெரிய வருகின்றது.

வருடாந்த பஸ் கட்டண மீளாய்வின் ☞2

# மஹிந்தவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்து!

### பிரதமரின் யாழ். வருகையை எதிர்த்து முன்னணி போராட்டம்

(இ.கலையமுதன்)

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் யாழ்ப் பாணத்துக்கான வருகையை எதிர்த்துத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இன்று போராட் டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்துக்கு முன்பாக 9.30 மணியளவில் ஒன்றுகூடிய போராட்டக்காரர்கள் மஹிந்த ராஜபக்ஷவை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்து, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கு, அரசி யல் கைதிகளை விடுதலை செய், காணாமல் ஆக்கப்பட்டோரைக் கண்டறிய ☞2






## ஜூன் மாதம் குட்டித் தேர்தல்?

உள்ளூராட்சி சபைத் தேர்தலை எதிர்வரும் ஜூன் மாதம் நடத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது எனத் தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தத் தேர்தலை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கான திட்டங்களை அமுல்படுத்துவதற்கு ஆளும் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஆலோசித்து வருகின்றது.

இது தொடர்பில் சகல தொகுதி அமைப்பாளர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

# ராஜபக்ஷ அரசுக்கு சர்வதேசம் உதவாது

### அடித்துக் கூறுகின்றார் சஜித்

**'நாட்டை எப்படி ஆள்வது எனத் தற்போதைய ஆட்சியாளர்களுக்குத் தெரியவில்லை. அதனால்தான் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் கொரோனாவைக் காரணம் காட்டுகின்றனர்.**

**- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.** ☞2



## அரசை பதவி விலகக் கோரி 23ஆம் திகதி தேசிய மக்கள் சக்தி மாபெரும் போராட்டம்



அரசுக்கு எதிராக மாபெரும் எதிர்ப்புக் கூட்டத்தை தேசிய மக்கள் சக்தி, எதிர்வரும் 23ஆம் திகதி நுகேகொடையில் நடத்தவுள்ளது.

'மக்கள் சக்தியின் எதிர்ப்பு' எனும் தொனிப்பொருளின் கீழ் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் ஜே.வி.பி. உட்பட தேசிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் கட்சிகளும், அமைப்புகளும் பங்கேற்க வுள்ளன. ☞2

## பொலிஸாருடன் முரண்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர் கைது!

(ந.லோகதயாளன்)

பொலிஸாருடன் முரண்பட்டார் என்ற குற்றச்சாட்டின் கீழ் ஈ.பி.டி.பியின் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை உறுப் பினர் சிவலிங்கம் நிமல் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் பணி நிமித்தம் சென்ற வேளை கட மைக்கு இடையூறு விளைவித்ததோடு பொலிஸாரையும் தாக்க முற்பட்டார் என்று தொடர்புபட்ட இரு பொலிஸார் பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டின் அடிப் படையிலேயே குறித்த ஈ.பி.டி.பி. உறுப்பினர் கைதுசெய் யப்பட்டுள்ளார். ☞2

## டக்ளஸுக்குக் கொரோனா!



(இ.கலையமுதன்)

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுக் குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட் டுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இன்று நயினாதீவுக்கு விஜயம் செய்த நிலையில் அங்கு வைத்து மேற்கொள் ளப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் அமைச்சருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டது.

இந்நிலையில், மஹிந்த ராஜபக்ஷவின் நாக விகாரை விஜயத்தின்போது அமைச்சர் பங்கேற்க வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழில் மத வழிபாடுகளில் மஹிந்த



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்துக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற் கொண்டுள்ள பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ இன்று மதத் தலங்களுக்குச் சென்று வழிபாடுகளை மேற்கொண் டார்.

இதன்படி நயினாதீவு நாக விகாரை மற்றும் நயினைநாகபூசணி அம்மன் ஆலயம், ஆரியகுளம் நாக விகாரைக்கு சென்று அவர் வழிபாடு களை மேற்கொண்டார்.

பிரதமரின் வருகையையொட்டி யாழ்ப்பாணத்தில் பாதுகாப்பு ☞2

## மீளவும் எகிறும் .....

(முதலாம் பக்கம் பார்க்க)

அடிப்படையிலேயே இந்தக் கட்டண உயர்வு இடம்பெறவுள்ளது.

அதேவேளை, நாட்டில் எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து சில நாட்களுக்கு முன்னரே பஸ் கட்டணம் 15 வீதத்தால் அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## மஹிந்தவை சர்வதேச .....

(முதலாம் பக்கம் பார்க்க)

சர்வதேச விசாரணை வேண்டும், இனப்படுகொலைக்கு சர்வதேச நீதி வேண்டும், கந்தரோடையில் புத்தர் கோயிலுக்கு அடிக்கல் நாட்டாதே, நாவற்குழி சிங்களக் குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்து போன்ற பல்வேறு கோஷங்கள் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகர் சுகாஸ் உட்பட கட்சியின் உறுப்பினர்கள் பலரும் பங்கேற்றிருந்தனர். போராட்டம் இடம்பெற்ற பகுதியில் பொலிஸாரும் புலனாய்வாளர்களும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

## ராஜபக்ஷ அரசுக்கு .....

(முதலாம் பக்கம் பார்க்க)

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

நெருக்கடியான காலகட்டத்தில்கூட கொள்ளையடிப்புகள் நிறுத்தப்படவில்லை. வெள்ளைப்பூடு முதல் சீனி வரை அனைத்து விடயங்களிலும் மோசடிகள் அரங்கேறியுள்ளன. எனினும், கொரோனாவைக் காட்டி அனுதாபம் திரட்டுவதற்கு ஆளுங்கட்சியினர் முற்படுகின்றனர். தமது இயலாமையை மூடிமறைக்கப் பலதும் செய்கின்றனர்.

ஆனால், தமக்கு முடியாது என்பதை ஆட்சியாளர்கள் ஏற்கனவே நிரூபித்து விட்டனர். சர்வதேசத்தை நாடமுடியாது. நாடினால் உதவியும் கிடையாது.

எனவே, நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய தலைமைத்துவத்தை உருவாக்க வேண்டும். அதற்கு நான் தயாராகவே இருக்கின்றேன். சம்பளம் உட்பட எந்தவொரு வரப்பிரசாதங்களையும் வாங்காமல் சிறந்த வழிகாட்டலை வழங்குவேன். – என்றார்.

## பொலிஸாருடன் .........

(முதலாம் பக்கம் பார்க்க)

குறித்த உறுப்பினர் கடந்த வருடமும் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அரசை பதவி விலகக் .......

(முதலாம் பக்கம் பார்க்க)

இதன்போது அரசு பதவி விலக வேண்டும் என வலியுறுத்தப்படவுள்ளது.

அத்துடன், தேசிய வளங்கள் விற்பனை செய்யப்படுவதற்கு எதிராகவும் தீர்மானம் நிறைவேற்றப்படவுள்ளது.

## யாழில் மத வழிபாடு .....

(முதலாம் பக்கம் பார்க்க)

அதிகரிக்கப்பட்டுள்ளது. பொலிஸாரும் இராணுவத்தினரும் இணைந்து கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிரதமர் கலந்துகொள்ளும் நிகழ்வுகளில் செய்தி சேகரிக்க ஊடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்- 076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## ஜெனிவாவில் பிடி இறுகும்

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 49 ஆவது அமர்வு ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

கடந்த பெப்ரவரி 28ஆம் திகதி ஆரம்பமான இந்த அமர்வு வரும் முதலாம் திகதி முடிவடைகின்றது. எனினும், இலங்கையைப் பொறுத்தவரை இந்தத் திருவிழா இம்முறை முடிந்துவிட்டது.

இனி, அடுத்த திருவிழா வரும் செப்டெம்பரில் கவுன்ஸிலின் 51ஆவது அமர்வில். இலங்கையைப் பொறுத்தவரை அது மிக முக்கிய அமர்வாக அமையும் என்று இப்போதே எதிர்வுகூறல்கள் வெளிப்படத் தொடங்கி விட்டன.

கடந்த ஆண்டு மார்ச்சில் நடந்த 46 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பில் – இலங்கையின் எதிர்ப்புடன் – ஒரு தீர்மானத்தை கவுன்ஸில் நிறைவேற்றியது. அதன் தொடர் நடவடிக்கைகள் தற்போதைய அமர்வு வரை நீடித்தன.

வரும் செப்டெம்பர் அமர்வுக்காக கவுன்ஸில் கூடும்போது முன்னைய 46 ஆவது அமர்வில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் வாசகங்களை நடைமுறைப்படுத்துவதற்கான கால அவகாசம் முடிந்து, இனி என்ன நிலையில் இலங்கை விவகாரத்தைக் கையாள்வது என்பது ஆராயப்படும்.

முன்னைய 46 ஆவது அமர்வில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கூறப்பட்டவற்றில் எவை, எவை நடைமுறைப் படுத்தப்பட்டன எவை, எவை சாத்தியமாகி உள்ளன என்ற அடிப்படையில் நிலைமை பரிசீலிக்கப்படும்.

இலங்கையின் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்றவை எனக் கருதப்படும் யுத்தக் குற்றங்கள், மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை குறித்து சர்வதேச நியமங்களுக்கு அமைவான முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு, உண்மைகள் கண்டறியப்பட்டு, பொறுப்புக் கூறல் நிலைநாட்டப்பட்டு, மீளநிகழாமை உறுதிப்படுத்தப்பட்டு, இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும் என்பதே இதுவரை காலமும் கவுன்ஸிலின் தீர்மானங்களில் இடம்பெற்ற பிரதான அம்சங்களாக அமைந்தன. தவிரவும், மனித உரிமைகள் நிலைவரங்கள் தொடர்பிலும் பயங்கரவாத தடுப்புச் சட்டம் நீடித்தமை போன்றவை குறித்தும் கவுன்ஸில் தொடர்ந்து கவலை வெளியிட்டு வருகின்றது.

இவையெல்லாம் தொடர்பில் கவுன்ஸிலில் இதுவரை நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் எவையும் குறிப்பிடத்தக்களவு கூட திருப்தி தரும் விதத்தில் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதுதான் யதார்த்த நிலைமை.

இத்தகைய தீர்மானங்களின் பயனற்ற தோல்வியுடன் தான் அடுத்த செப்டெம்பரில் இன்னொரு தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கான ஆயத்தங்களுடன் கவுன்ஸிலின் இலங்கை தொடர்பான விடயங்களைக் கையாளும் – மேற்கு நாடுகளை உள்ளடக்கிய – இணைக்குழு தயாராகின்றது. சர்வதேச நியமங்களுக்கு அமைய இலங்கையில் நீதியை நிலை நிறுத்துவதற்கு கொழும்பு மறுத்துவரும் நிலையில், கவுன்ஸிலில் அடுத்தடுத்து நிறைவேற்றப்பட்டு வந்த தீர்மானங்கள் பெரும்பாலும் நடைமுறைப்படுத்தப்படாமல் வெறுமனே காலம் இழுத்தடிக்கப்பட்டு வந்தாலும், அவற்றில் ஒரு விடயம் நோக்கத்தக்கதாக உள்ளது.

ஒவ்வொரு தீர்மானத்திலும் முன்னைய தீர்மானத்தை விட சற்று இறுக்கமாக இலங்கைக்கு எதிரான சர்வதேச சமூகத்தின் பிடி வலுவடைந்து வருவதை நாம் அவதானிக்க முடியும்.

இனி, செப்டெம்பரில் 51 ஆவது அமர்வில் இலங்கை தொடர் பில் எடுக்கப்படக்கூடிய தீர்மானமும் இலங்கையின் கழுத்தை மேலும் இறுக்குவதாக அமையும் என்று இப்போதே எதிர்வுகூறப்படுகின்றது. இலங்கையில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பான சாட்சிய பதிவு நடவடிக்கைகளை ஐ.நா. விரிவுபடுத்துவது மற்றும் இலங்கைக்கு எதிரான தடைகளுக்கான முன்னறிவித்தல் போன்றவை 51 ஆவது அமர்வில் இடம்பெறும் சாத்தியங்கள் தென்படுகின்றன. காலதாமதம் ஆனாலும் இலங்கைக்கு எதிரான பிடி இறுகும் என்பதே அவதானிகளின் கருத்து.

## இந்தியாவை அடுத்து சீனாவிடம் கையேந்தியது இலங்கை அரசு!

அந்நியச் செலாவணி நெருக்கடியை அடுத்து, கடன் கொடுப்பனவுகளை ஒத்தி வைத்தல் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதி செய்வதற்கான கடன் உள்ளிட்ட மேலதிக நிதி உதவியை இலங்கை சீனாவிடம் கோரியுள்ளது.

இந்த ஆண்டு சீன வங்கிகளுக்கு 10 கோடி அமெரிக்க டொலர்களுக்கு மேலதிகமான கடனை இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டியுள்ளது. இந்நிலையில் தற்போதைய நெருக்கடியிலிருந்து விடுபடும் வரை இந்த கொடுப்பனவுகளை தாமதமாக செலுத்த சீனாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமன்றி, உள்ளூர் உற்பத்திக்குத் தேவையான மூலப்பொருள்களைவாங்குவதற்கானகடனையும் இலங்கை அரசாங்கம் சீனாவிடம் கோரியுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கை மேலதிக நிதியுதவி கேட்டுள்ளது என்றும் இரு தரப்பும் அதற்கான பேச்சுகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் சீனத் தூதரகத்தின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக இந்தியாவிடமிருந்து 100 கோடி டொலர் கடனை இலங்கை பெற்றமை குறிப்பிடத்தக்கது.

## காணாமல் போன இலங்கையரை தேடும் பணியில் தமிழகப் பொலிஸ்

இலங்கையில் இருந்து காணாமல் போன ஒருவரை அவரது படகுடன் தேடும் பணியில் தமிழக பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம் தேவிபட்டினம் கரையோரத்தில் கைவிடப்பட்ட கப்பல் ஒன்று கடலோர காவற்படையினரினால் கண்டெடுக்கப்பட்டது. கிளிநொச்சியில் இருந்து காணாமல் போன குறித்த நபர் தமிழ்நாட்டுக்குள் நுழைந்திருக்கலாம் என பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி தி ஹிந்து செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்வாறு காணாமற்போனவர் மற்றும் அவரது குடும்ப விவரங்கள் வெளியாகவில்லை என்றாலும் தமது உளவுப்பிரிவின் உதவியோடு தேடுதலை நடத்திவருகின்றோம் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## டிஜிற்றல் முறையில் கட்டணம் செலுத்தலாம் நீர் கட்டணமும் அதிகரிக்கும் வாய்ப்புக்கள்!

டிஜிற்றல் முறையில் பணம் செலுத்தும் முறையை அறிமுகப்படுத்த தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை முடிவு செய்துள்ளது.

இலங்கையில் கடதாசி மற்றும் அச்சடிக்கும் பொருள்களுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக குறித்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

மேலும் டொலர் தட்டுப்பாடு காரணமாக அச்சிடுவதற்குத் தேவையான காகிதங்களை இறக்குமதி செய்ய நிறுவனங்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றன என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகளாக நீர்க் கட்டணத்தை உயர்த்தவில்லை என்பதால் தற்போது அந்த முடிவு தொடர்பில் பரிசீலிக்கவும் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை முடிவு செய்துள்ளது.

## தொடர்ந்து மூடப்படும் உணவகங்கள் பலர் தொழிலின்றி அந்தரிக்கும் நிலை!

நாட்டில் அடுத்தடுத்து சமையல் எரிவாயுவிற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக ஹோட்டல்களும் சிறு அளவிலான உணவு விற்பனை நிலையங்களும் மூடப்பட்டுவருகின்றமையை அவதானிக்க முடிகின்றது.

எதிர்காலத்திலும் எரிவாயுவிற்கும் தட்டுப்பாடு ஏற்படும் என்பதால் ஹோட்டல் தொழில் துறையிலுள்ள சுமார் 5 லட்சம்பேர் பாதிக்கப்படக் கூடும் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போதைய சூழலில் பலர் தொழில்களை இழந்துள்ளனர் எனவும், ஹோட்டல்களுக்கான வாடகைப் பணத்தைகூட செலுத்த முடியாமல், உரிமையாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் எனவும் ஹோட்டல் உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

சில ஹோட்டல்கள் திறக்கப்பட்டிருந்தாலும் அங்கு கொத்து ரொட்டி, ரைஸ் போன்ற உணவுகள் தயாரிக்கப்படுவதில்லை எனவும், விறகை பயன்படுத்தியே கடும் சவால்களுக்கு மத்தியில் சமையல் இடம்பெறுவதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

## காலவரையறையின்றி மீண்டும் மூடப்பட்டுள்ளது சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்



சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மீண்டும் கால வரையறையின்றி மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நாட்டில் நிலவும் மசகு எண்ணெய் தட்டுப்பாடு காரணமாக இவ்வாறு சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் காலவரையறை யின்றி மூடப்பட்டதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இதற்கு முன்னரும் மசகு எண்ணெய் பற்றாக்குறை காரணமாக இரண்டு தடவைகள் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மெல்பனில் அமரர் சண்முகம் சபேசனின் எண்ணங்கள் 'காற்றில் தவழ்ந்த சிந்தனைகள்' நூலாக வெளியானது

## அமரத்துவம் எய்தியவரின் கனவு இன்று நனவாகிறது!






வானொலியில் சபேசன்

இலங்கை வடபுலத்தில் யாழ்ப்பாணம், நீராவியடியில் 1954 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 06 ஆம் திகதி சண்முகம் - பர்வதலக்ஷமி தம்பதியரின் மூத்த புதல்வனாகப் பிறந்த சபேசன், கடந்த 2020 ஆம் ஆண்டு மே மாதம் 29 ஆம் திகதி ஆஸ்திரேலியா மெல்பனில் மறைந்தார்.

யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் மாணவரான அவர், 1989 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் மெல்பனுக்கு புலம்பெயர்ந்து வந்தபின்னர், விக்ரோரியா ஈழத்தமிழ்ச்சங்கம், தமிழர் ஒருங்கிணைப்புக்குழு, தமிழர் புனர்வாழ்வுக்கழகம் முதலானவற்றில் அங்கம் வகித்தவாறு, மெல்பன் 3CR தமிழ்க்குரல் வானொலியில் கால் நூற்றாண்டு காலம் ஊடகவியலாளராகவும் எழுத்தாளராகவும் இயங்கிய தமிழ்த் தேசிய பற்றாளர்.

3CR தமிழ்க்குரல் வானொலியில் தங்கு தடையின்றி, வாரம்தோறும் அரசியல் விமர்சன கட்டுரைகளை எழுதி தனது குரலிலேயே ஒலிபரப்பினார்.

அவ்வாறு எழுதப்பட்ட கட்டுரைகளை தொகுத்து நூலாக்கவேண்டும் என்ற எண்ணத்திலேயே காலத்தை கடத்திவிட்டு, எதிர்பாராமல் உடல்நலம் பாதிப்புற்று மறைந்துவிட்டார்.

தனது நூல் வெளியிடும் எண்ணத்தை 2009 ஆண்டிற்கு முன்னர் தான் ஆழமாக நேசித்த தமிழ்த்தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனிடத்திலும் கூறியபோது, நூலைத் தொகுத்து அச்சிடும் வேலையை தாமதிக்காமல் பாரும், அந்த நூலை நானே வெளியிட்டு வைக்கின்றேன் என்றும் அவர் இவருக்கு கூறியிருந்தார். எனினும் சபேசனின் அந்தக் கனவு அப்போது நனவாகவில்லை. அந்த நூல் வெளியீடு மட்டுமல்ல, இதர கனவுகளும் நனவாகாமல் திடீரென அற்பாயுளில் அவர் மறைந்தது தீராத சோகம்தான்.



தலைவருடன் சபேசன்

சபேசன் வாழ்ந்த காலத்தில், அவர் சார்ந்து நின்று அர்ப்பணிப்போடு இயங்கிய அமைப்புகள் மற்றும் அவற்றோடு இணைந்திருந்தவர்கள் மற்றும் வன்னி பெரு நிலப்பரப்பில் அவர் உளமாற நேசித்த மக்கள், தமிழ்நாட்டில் அவர் நெருங்கிப்பழகிய பல தமிழ்த் தேசிய உணர்வாளர்கள் மற்றும் எழுத்தாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் என பெருந்தொகையானோரைக்கொண்ட வாசகர்களையும் வானொலி நேயர்களையும் பெற்றிருந்தவர்.

எனினும் இத்தகு ஆளணிப் பலமிருந்தும் அவரால் தனது கனவை நனவாக்கமுடியாமல் போனது துர்ப்பாக்கியமே.

இவ்வாறு வசதி வாய்ப்புகள் இருந்தும் தங்கள் படைப்புகளை தொகுத்து நூல் வடிவில் வெளியிட முடியாமல்போன தமிழ் எழுத்தாளர்கள் எமது சமூகத்தில் முன்னரும் இருந்திருக்கிறார்கள்.

இலங்கையில் முப்பது ஆண்டு காலமாக நீடித்திருந்த போர் 2009 ஆம் ஆண்டு மேமாதம் முடிவுக்கு வந்தபோது, நேர்ந்த உயிரிழப்புகளினாலும், ஆழ்ந்த நேசத்திற்குரிய அவரது தமிழ்த்தேசியத்தலைவர் குறித்து வெளியான செய்திகளை ஜீரணிக்கமுடியாமலும் பெரிதும் கலங்கி, மனவுளைச்சலுக்கும் ஆளாகியிருந்தவர் சபேசன்.

மாற்றம் வரும் என எதிர்பார்த்தேன், ஏமாற்றம் தான் மிஞ்சியது, எஞ்சியது என்று மறைவுக்கு முன்னர் சொல்லிக்கொண்டிருந்தார் என்பதை, அவரது மறைவுக்குப் பின்னர் வெளியாகும், காற்றில் தவழ்ந்த சிந்தனைகள் நூலில் அவரது மனைவி திருமதி சிவமலர் சபேசன் பதிவுசெய்துள்ளார்.

இந்நூல் இன்று 19 ஆம் திகதி சனிக்கிழமை மெல்பனில் Glen Waverley Community Centre மண்டபத்தில் - சற்று முன்னர் - வெளியிட்டு வைக்கப்பட்டது.

சபேசனின் நெருங்கிய உறவினர் திரு. நடராஜா கனகசபை அவர்களின் தலைமையில் இம்மண்டபத்தில் மாலை 4.00 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்வில் சபேசனின் உருவப்படத்திற்கு விளக்கேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

சபேசனின் புதல்வி செல்வி நங்கை சபேசனும் தந்தையார் பற்றிய நினைவுரையை நிகழ்த்தினார்.

சபேசனின் நீண்டகால நண்பரும் தமிழக அரசியல் பிரமுகரும் திராவிடர் இயக்கத் தமிழர்பேரவையின் நிறுவனருமான பேராசிரியர் சுப. வீரபாண்டியனின் அணிந்துரையுடன் இந்த நூல் வெளியானது. இந்நூலுக்கான முகப்பினை வடிவமைத்தவர் தமிழகத்தைச்சேர்ந்த ஓவியர் ஆர். சரவணா அபிராமன். அச்சுப் பதிப்பு தமிழ்நாடு சுதர்சன் புக்ஸ். சபேசனின் நூல் வெளியீட்டு நினைவரங்கில் திருவாளர்கள் ஆரூரண் ரவீந்திரன், விவேகானந்தன், ஸ்ரீநந்தகுமார், எழுத்தாளர்கள் பாடும்மீன் ஸ்ரீகந்தராசா, முருகபூபதி ஆகியோர் உரையாற்ற விருந்தனர்.



தமிழ்ச்செல்வனுடன் சபேசன்



எழுத்தாளர் கி.ரா.வுடன் சபேசன்




மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும் சபேசன்

**- முருகபூபதி -**

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



# தமிழகத்தின் அடுத்த நிதியாண்டுக்கான பட்ஜட் நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் தாக்கல்



சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள சட்டசபைக் கூட்டரங்கில் நேற்றுக் காலை 10 மணிக்கு ஆரம்பமான தமிழக சட்டசபைக் கூட்டத்தில் புதிய ஆண்டுக்கான பட்ஜட் தாக்கல் செய்யப்பட்டது. தமிழக நிதி அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் பட்ஜட்டைத் தாக்கல் செய்தார்.

அரசு பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று மேற்படிப்பில் சேரும் அனைத்து மாணவிகளுக்கும் பட்டப்படிப்பு, பட்டயப்படிப்பு, தொழிற் படிப்பு ஆகியவற்றில் இடைநிற்றல் இன்றி முடிக்கும் வரை மாதம் 1,000 ரூபா அவர்களது வங்கிக் கணக்கிற்கு நேரடியாகச் செலுத்தப்படும் என்றும் ஏற்கனவே பிற கல்வி உதவித் தொகை பெற்று வந்தாலும், இத்திட்டத்தில் கூடுதலாக உதவி பெறலாம் என்றும் இத்திட்டத்தின் மூலம் சுமார் 6 லட்சம் மாணவிகள் ஒவ்வொரு ஆண்டும் பயன்பெற வாய்ப்பு உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டு இந்தப் புதிய முன்முயற்சிக்காக வரவு- செலவுத் திட்டத்தில் 698 ரூபா கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த பட்ஜெட்டின் வாசிப்பின் முதல் நாளில் விவரிக்கப்பட்ட சில முக்கிய அம்சங்கள் -

செங்கல்பட்டு மாவட்டம் ஆத்தூரில் 27 கோடியில் சமூக மேம்பாட்டிற்கான ஒருங்கிணைந்த பயிற்சி மையம் அமைக்கப்படும்.

ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டத்திற்கு 2,542 கோடியும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்திற்கு 1,949 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறைக்கு 5,922.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுக்கு 5 லட்சம் இளைஞர்களை, படிப்பில், அறிவில், சிந்தனையில், ஆற்றலில், திறமையில் மேம்படுத்துவதே முதலமைச்சரின் கனவுத் திட்டமான நான் முதல்வன் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இத்திட்டத்தில் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் மாணவ, மாணவிகளின் தனித்திறமைகள் அடையாளம் காணப்பட்டு, அவை ஊக்குவிக்கப்படும்.

மேலும் தொழில் நிறுவனங்களின் திறன் தேவைக்கேற்ப மாணவர்களுக்கு சிறப்பு திறன் பயிற்சிகள் வழங்கப்படும். இதன் மூலம் மாணவர்களின் வேலை பெறும் திறன் பெருகும். இத்திட்டத்தை செயல்படுத்த 50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்திய தொழில்நுட்பக் கழகங்கள், இந்திய அறிவியல் கழகம், அனைத்திந்திய மருத்துவ அறிவியல் கழகங்கள் போன்ற புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர, அரசுப் பள்ளி மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில், இந் நிறுவனங்களில் இளநிலைப் பட்டப்படிப்பு பயில்வதற்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்கும். 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரையில் அரசுப் பள்ளிகளில் பயின்றுள்ள மாணவர்கள் இந்த உதவியைப் பெறலாம்.

தமிழ்நாட்டில் உள்ள திறன்மிக்க மனிதவளத்தை மேலும் மேம்படுத்தி, ஓர் அறிவுசார் பொருளாதாரத்தை உருவாக்குவது இந்த அரசின் தொலை நோக்குப் பார்வையாகும். உலகளாவிய பங்களிப்புடன் அறிவு சார் நகரம் ஒன்று உருவாக்கப்படும்.

இந்த அறிவு சார் நகரம், உலகளவில் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களின் கிளைகளைக் கொண்டிருக்கும். இந்நகரம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு மையங்கள், திறன் பயிற்சி மையங்கள், அறிவு சார்ந்த தொழில் நிறுவனங்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளைத் தன்னகத்தே கொண்டிருக்கும்.

தமிழ்நாட்டின் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம் உயர்ந்து கொண்டே வருகிறது. அதற்கேற்ப, அரசுக் கல்லூரிகள் மற்றும் பல்தொழில் நுட்பக் கல்லூரிகளின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது அவசியமாகும்.

அடுத்த 5 ஆண்டுகளில் 1,000 கோடி ரூபாய் செலவில் ஒரு சிறப்புத் திட்டத்தை உருவாக்கி, புதிய வகுப்பறைகள், விடுதிகள், ஆய்வகங்கள், திறன்மிகு வகுப்பறைகள் உருவாக்கப்படும். இதற்காக, இவ்வாண்டு 250 கோடி ரூபா வழங்கப்பட்டுள்ளது.

முன்னுரிமை அடிப்படையில் 7.5 சதவீத ஒதுக்கீட்டில் கல்லூரிகளில் சேரும் அரசுப் பள்ளி மாணவர்களின் பல்வேறு கட்டணங்களுக்காக 204 கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இம்மதிப்பீடுகளில் உயர் கல்வித் துறைக்கு 5,668.89 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோரால் தொடங்கப்படும் புத்தொழில் நிறுவனங்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு புத்தொழில் மற்றும் புத்தாக்க இயக்கத்திற்கு 30 கோடி ரூபா நிதியாக வழங்கப்படும். ஆதி திராவிட, பழங்குடியின மாணவர்களுக்கு வழங்கப்படும் உயர்கல்வி உதவித்தொகைக்காக 1,963 கோடி ரூபாவும், உணவுக் கட்டணத்திற்கு 512 கோடி ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இம்மதிப்பீடுகளில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கு 4,281.76 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த முறை உள்கட்டமைப்பு பணிகளுக்காகவும், நிதி ஒதுக்கீட்டுக்காகவும், புதிய வரிகள் விதிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் புதிய வரிகள் எவையும் விதிக்கப்படவில்லை. இந்த பட்ஜட் வரியில்லாத பட்ஜட்டாக மலர்ந்துள்ளது.



## தமிழக பட்ஜட் கூட்டத்தொடர் 24ஆம் திகதி வரை நடைபெறும்

2022-2023-ஆம் நிதி ஆண்டுக்கான பட்ஜட் நேற்றும், வேளாண் பட்ஜட் இன்றும் தாக்கல் செய்யப்பட்டன. தமிழக பட்ஜட் கூட்டத்தொடரை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது குறித்து சபாநாயகர் அப்பாவு தலைமையில் நடைபெற்ற அலுவல் ஆய்வு கூட்டத்தில், கூட்டத்தொடரை 24 ஆம் திகதி வரை நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

வருகிற திங்கள், செவ்வாய், புதன் கிழமைகளில் பட்ஜட் மீதான விவாதம் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஹோலி கொண்டாட்டத்தில் மோதல் உத்தரப்பிரதேசத்தில் இருவர் சாவு




உத்தரபிரதேச மாநிலம் அமேதி மாவட்டத்தில் உள்ள ரேவ்ராபூர் கிராமத்தில் ஏராளமானோர் நேற்று ஹோலிபண்டிகையை முன்னிட்டு வண்ணங்களைப் பூசிக் கொண்டாடினர்.

அப்போது, வண்ணம் பூசுவதில் ஏற்பட்ட தகராறில் அங்கிருந்தவர்களிடையே பயங்கர மோதல் ஏற்பட்டுள்ளது. இதில், அகந்த் பிரதாப் சிங், மற்றும் ஷிவ்ராம் பாசி ஆகிய இருவரும் உயிரிழந்துள்ளனர். மேலும் 6 பேர் படுகாயங்களுடன் ஜமோ பகுதியில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதையடுத்து சம்பவம் நடைபெற்ற இடத்தில் பொலிஸார் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்துள்ளமையோடு, வழக்குப்பதிவு செய்து விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

## உக்ரைனில் இறந்த மாணவரின் உடல் மார்ச் 21 இல் கொண்டுவரப்படவுள்ளது



உக்ரைன்- ரஷ்யா போரில் கடந்த சில நாள்களுக்கு முன்பு கார்கிவ் நகரில் நடைபெற்ற சண்டையின் போது இந்திய மாணவர் நவீன் சேகரப்பா கொல்லப்பட்டார். அவரது உடல் உக்ரைனில் உள்ள மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

உக்ரைன்- ரஷ்யா நாடுகளுக்கு இடையிலான சண்டை முடிவுக்கு வந்த பிறகே, நவீனின் உடல் இந்தியா கொண்டு வரப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருந்த நிலையில், மாணவர் நவீனின் உடல் வரும் திங்கட்கிழமை அதிகாலை 3 மணியளவில் பெங்களூரு விமான நிலையத்துக்கு கொண்டு வரப்படும் என்று கர்நாடகா முதல்வர் பசவராஜ் பொம்மை தற்போது அறிவித்துள்ளார்.

## பட்ஜட்டில் தொலைநோக்குத் திட்டம் எதுவும் இல்லை பா.ஜ.க. தமிழகத் தலைவர் அண்ணாமலை கருத்து



நேற்று தாக்கல் செய்யப்பட்ட தமிழக பட்ஜட்டில் மத்திய அரசின் திட்டங்களை வேறு பெயர் சூட்டி மாநில அரசு அறிவித்துள்ளதே தவிர, வேறெதுவும் அதில் இல்லை என பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறியுள்ளார்.

தி.மு.க. அரசு தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை இன்றும் நிறைவேற்றவில்லை. தொலை நோக்குத் திட்டம் எதுவும் இல்லாத பகல் கனவு பட்ஜட்டாக இது அமைந்திருக்கிறது.

6 முதல் 12ஆம் வகுப்பு வரை அரசுப் பள்ளியில் படித்த மாணவிகளுக்கு உயர்கல்வியினை பயிலும் போது 1,000 ரூபா வழங்கப்படும் என தமிழக பட்ஜட்டில் அறிவித்துள்ளனர். ஆனால், இது முன்னர் அவர்கள் வழங்கிய பழைய ஆயிரம் ரூபா வாக்குறுதி போல் இல்லாமல் முறையாக செயல்படுத்த வேண்டும் என்றும் அண்ணாமலை குறிப்பிட்டுள்ளார்.

# கல்முனை மேயர் தர்பார் நிர்வாகம் ஊழல், மோசடி எனக் குற்றச்சாட்டு

## சபை உறுப்பினர் பகிரங்கமாகச் சுமத்துகிறார்



(நூருல் ஹுதா உமர்)

ஊழல்கள் நிறைந்த, அதிகார துஷ்பிரயோகமிக்க அமைப்பாகக் கல்முனை மாநகரசபை திகழ்கிறது. கல்முனைமாநகரசபைஉத்தியோகத்தர்கள், ஊழியர்கள், சபை உறுப்பினர்களை மதிக்காமல் கல்முனை மாநகர சபை முதல்வர் நடந்துவருகின்றமையுடன் அதிகார மோசடிகளையும் தொடர்ந்து செய்து வருகிறார். சபை அங்கீகாரம் இல்லாமல் நூற்றுக்கும் மேற்பட்டவர்களை வேலைக்குச் சேர்த்தமை, சபை அனுமதியின்றி குப்பைவரியை அறிமுகம் செய்தமையுடன் சோலை வரி, விளம்பர வரி என வரிக்குமேல் வரிவிதித்து மக்களை துன்புறுத்துகின்றமை, வீணான செலவீனங்களை மேற்கொள்வது, மாநகர சொத்துக்களை சுயதேவைக்குப் பயன்படுத்துவது, இதனைச் சுட்டிக்காட்டும்உயரதிகாரிகளைமலினப்படுத்துவது போன்ற செயல்களில் தொடர்ந்தும் ஈடுபட்டு மக்களின் வரிப்பணத்தை வீணடித்துக்கொண்டிருக்கிறார் என கல்முனை மாநகர சபை உறுப்பினர் எம்.ஐ.எம். அப்துல் மனாப் தெரிவித்தார்.

நேற்று அவரது அலுவலகத்தில் ஊடகவியலாளர்களை சந்தித்து பேசிய அவர், தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் –

முஸ்லிம் அரசியலின் அடையாளமாகதிகழ்பவர்களில் ஒருவரான எம்.எஸ். காரியப்பரின் பேரன் கல்முனை மாநகர பிரதம சுகாதார வைத்திய அதிகாரியாக கடமையாற்றுகிறார். அவர் தனது பாட்டனை போன்றே மக்கள் நலன் மீது அதிக அக்கறைகொண்டவராக தனது கடமைகளில் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார். தனது கடமை எல்லைக்கு அப்பாலும் சென்று மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் ஆர்வம் கொண்டவராக இருக்கிறார். மக்களினதும், மாநகர சுகாதார ஊழியர்களினதும் தேவையறிந்து சேவைசெய்யும்டாக்டர்அர்சத்காரியப்பர் மேயரின் ஊழல்களுக்கு சோரம்போகாமல் இருப்பதனால் அவரை கூட அங்கிருந்து வெளியேற்றும் நடவடிக்கைகள் இப்போது இடம்பெற ஆரம்பித்துள்ளன.

நாட்டில் உள்ள எரிபொருள் சிக்கல்களுக்குமத்தியில்மாநகரவாகனங்களை தனது சொந்த தேவைக்கு நீண்டதூரம் பயணிக்க பயன்படுத்திக்கொண்டு திண்மக்கழிவகற்றலை தள்ளுவண்டிகள் மூலம் செய்யப்போகிறேன் என அறிக்கைகள் விட்டுக்கொண்டிருக்கிறார். 54 ஆயிரம் எண்ணிக்கை அளவில் வீடுகளை கொண்ட கல்முனை மாநகரத்தில் சிறிய 20 தள்ளுவண்டிகளை கொண்டு குப்பை அள்ளுவது சாத்தியமாகுமா? ஓரிரு வீடுகளின் குப்பைகளைக் கூட அகற்றமுடியாத தள்ளுவண்டிகள் மூலமான கழிவகற்றல் கல்முனைக்குச் சாத்தியமில்லை.

கல்முனை பஸ்நிலைய புனரமைப்பில் முறைகேடு, நிதிக்குழு தீர்மானமில்லாமல் வாங்கப்பட்ட மின்குமிழ் கொள்வனவில் பாரிய ஊழல், பொது சொத்துக்களின் பாவனையில் முறைகேடு, அவரது வாகனத்திற்கும் எவ்வித அனுமதியுமின்றி எரிபொருள் நிரப்புதல், கல்முனை பிரதான சந்தை கட்டடத் தொகுதி குத்தகையில் முறைகேடு, கொவிட் 19 கட்டுப்பாட்டுக்கென ஒதுக்கப்பட்ட நிதி பயன்படுத்தப்படாமல் மோசடி செய்தமை, அதிகாரிகளுடனான முரண்பாடுகள், ஒழுங்கான திட்டமிடல்கள் இல்லாத வேலைத்திட்டங்கள், உயர் அதிகாரிகளின் பணியில் தலையீடுகள், அரச அதிகாரிகளின் பணியில் தடையை ஏற்படுத்தும் முன்னெடுப்புக்கள், உயரதிகாரிகளை நடத்துவதில் உள்ள பிரச்சினைகள், மாநகர அபிவிருத்தியில் பாராமுகம், கல்முனைக்கு முதல்வரினாலும், மாநகர நிர்வாகத்தினாலும் செய்யப்படும் அநீதிகள் தொடர்பில் பல தடவைகள் அரச மேல்மட்டங்களுக்கும், கணக்காய்வு திணைக்களம் மற்றும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு, மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் போன்ற பலருக்கும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. முதல்வரினால்தர்பார்ஆட்சிபுரியப்படும் கல்முனை மாநகர சபையில் நிறைய பிரச்சினைகள் தீர்க்கப்படாமல் இருக்கிறது. இதனால் மக்களின் வரிப் பணம் பல கோடி ரூபா நிதி வீணடிக்கப் படுகிறது. – என்றார்.

## கந்தளாயில் விபத்து

திருகோணமலை – கந்தளாய், போட்டன்காடு சந்தியில் நேற்றிரவு மோட்டார் சைக்கிள் ஒன்றுடன் வான் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் காயமடைந்து கந்தளாய் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் கந்தளாய் போட்டன்காடு சந்தியில் திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இடத்திலேயே இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

### சுவாமி நடராஜானந்தாவின் சிரார்த்ததினம் அனுஷ்டிப்பு

(காரைதீவு நிருபர் சகா)

காரைதீவில் பிறந்தவரும் இராம கிருஷ்ண மிஷன் துறவிகள் சேவையில் சிகரமாக விளங்கியவருமான சுவாமி நடராஜானந்தாஜீயின் 55 ஆவது சிரார்த்ததினம் நேற்று வெள்ளிக்கிழமை அவர்பிறந்த காரைதீவில் நடைபெற்றது.

அவரது திருவுருவச்சிலை அமைந்துள்ள பிரதானவீதியில் இந்து சமய விருத்திச் சங்க உபதலைவர் இரா.குணசிங்கம் தலைமையில்நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் சிவ.ஜெகராஜன் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார்.

சிறப்புரையை சுவாமி நடராஜானந்த நூற்றாண்டு விழாச் சபையின் செயலாளர் வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்தினார்.

முன்னதாக சுவாமியின் உறவினரான த.சச்சிதானந்தம் நந்திக்கொடியேற்றியதும் துறவறகீதம் இசைக்கப்பட்டது. சபைச்செயலாளர் கு.ஜெயராஜி நன்றியுரையாற்றினார்.



## அறப்பணி மையத்தினால் 26ஆவது வீடு கையளிப்பு

மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம் கல்வி, சமூக நலன், பண்பாடு அறப்பணி மையத்தால் மட்டக்களப்பு மாவட்டத்தில் 26 ஆவது வீடு புதன்கிழமை கையளிக்கப்பட்டது.

அறப்பணி மையத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளையினூடாக வழங்கப்பட்ட தகவலுக்கு இணங்க மட்டக்களப்பு மாவட்டம் வந்தாறுமூலை கிராமத்தில் வசித்துவருகின்ற பெண் தலைமை தாங்கும் குடும்பம் ஒன்றுக்கு 26 ஆவது வீட்டிற்கான அடிக்கல் கடந்த 31.01.2022 ஆம் திகதி நாட்டப்பட்டிருந்தது.

நீண்டகாலமாக அடிப்படை வசதியற்ற தற்காலிக வீடொன்றில் வாழ்ந்து வந்தவர்களுக்கே இவ்வீடு கையளிக்கப்பட்டது.

இதற்கான நிதி அனுசரணையை சுவிஸ் நாட்டில வசிக்கும் சக்தி குமுதா ஆனந்தன் மற்றும் அவரது குடும்பத்தினர் சங்கீத ஆனந்தன், சௌமியா ஆனந்தன், வர்சா ஆனந்தன் ஆகியோர் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## தேங்காய் பறிக்க வந்தவர் நகை பறித்துச் சென்றார்!

மட்டக்களப்பு – ஞானசூரியம் சதுக்கப்பகுதியில் உள்ள வீடு ஒன்றில் சிறுமியின் கழுத்தில் இருந்த சங்கிலி, காப்பு உள்ளிட்ட தங்க நகைகளை கொள்ளையிட்டு சென்ற நபர் கைது செய்யப்பட்டுள்ளார். அந்த நபர் மரம் ஏறும் தொழிலாளி எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தென்னை மரங்களில் தேங்காய்பறிக்கும்தொழிலாளி அந்தப் பகுதியிலுள்ள வீடு ஒன்றில் கடந்த 12 ஆம் திகதி சென்று தேங்காய் பறித்து தரவா எனக் கேட்டு அங்குள்ள தென்னை மரத்தில் ஏறி தேங்காய் பறித்துக் கொண்டிருந்துள்ளார். இந்த நிலையில் வீட்டின் தாயார் குளியலறைக்கு சென்று திரும்பிய நிலையில் தேங்காய் பறித்த நபரைக் காணவில்லை. அவரைத் தேடிய போது, வீட்டினுள் சிறுமியின் கழுத்தில் இருந்த ஒரு பவுண் தங்கச்சங்கிலி, அரை பவுண் கொண்ட இரு காப்புகளை ஆட்டையைப் போட்டுச் சென்றுள்ளமை தெரியவந்துள்ளது. இதனையடுத்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

விசாரணை நடத்திய பொலிஸார் கல்லடி வேலூர் பகுதியைச் சேர்ந்த 36 வயதுடைய ஒருவரைக் கைது செய்தமையுடன் கொள்ளையிடப்பட்ட தங்க ஆபரணங்களையும் மீட்டனர்.

## புதிதாக அமைக்கப்பட்ட நடைபாதை திருப்பெருந்துறையில் திறந்துவைப்பு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

நூறு நகரங்களை அபிவிருத்திசெய்யும்திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு மாநகரசபைக் குட்பட்டதிருப்பெருந்துறையில் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட வேலைத்திட்டம் மக்கள் பாவனைக்காகநேற்றுக்காலை 10.30 மணியளவில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அவரின்சிபாரிசுக்கு அமைவாக அங்குள்ள நடைபாதை நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அமைக்கப்பட்டு தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு திருப்பெருந்துறை வீதியில் சுமார் 300 மீற்றர் தூரம் இந்த நடைபாதை பொழுதுபோக்கு அம்சங்களுடன் சுமார் 1.8 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் எல்.ஜீ.லியனகே தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. சுதர்சனி ஸ்ரீகாந்த், முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளருமான பூ.பிரசாந்தன், மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தியாகராஜா சரவணபவன், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் மட்டக்களப்பு மாவட்டப் பணிப் பாளர் மற்றும் பொறியியலாளர், தொழில் நுட்ப உத்தியோகத்தர்கள், ஏனைய திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# போரினால் பாதிக்கப்பட்ட உக்ரைன் குழந்தைகளுக்கு ஆதரவுக் கரம் நீட்டினார் டென்னிஸ் வீரர் ரோஜர் பெடரர்

சர்வதேச டென்னிஸ் விளையாட்டில் 20 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்ற சுவிஸ் நாட்டின் வீரர் ரோஜர் பெடரர், முழங்கால் சத்திர சிகிச்சை காரணமாக அண்மைய நாட்களில் போட்டிகளில் பங்கேற்காமல் ஓய்வெடுத்து வருகிறார்.

உக்ரைனில் போரினால் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளுக்கு 5 லட்சம் டொலர் நன்கொடை வழங்குவதற்கு அவர் விருப்பம் தெரிவித்துள்ளார். ரோஜர் பெடரர் அறக்கட்டளை மூலம் வழங்கப்படும் இந்த நன்கொடை, போரினால் பாதிக்கப்பட்ட உக்ரைன் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் கல்வியை உறுதி செய்யும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனில் இருந்துவரும் படங்களைப் பார்த்து தானும் குடும்பத்தினரும் திகிலடைந்தோம் எனவும், மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களுக்காக மனம் வருந்துகிறேன் எனவும் தனது டுவிட்டர் பதிவில் பெடரர் தெரிவித்துள்ளார்.

உக்ரைனில் ஆதரவு தேவைப்படும் குழந்தைகளுக்கு நாங்கள் உதவி வழங்குவோம். சுமார் 60 லட்சம் உக்ரேனிய குழந்தைகள் தற்போது பாடசாலைக் கல்வியை இழந்துள்ளனர். இதனால், கல்விக்கான அணுகலை வழங்க இது மிகவும் முக்கியமான நேரம் என்பதை நாங்கள் அறிவோம் என்றும் ரோஜர் பெடரர் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் பிரபலமான டென்னிஸ் நட்சத்திரங்களில் ஒருவரும், யுனிசெவ் அமைப்பின் இங்கிலாந்துத் தூதருமான அன்டி மரே, 2022 ஆம் ஆண்டு டென்னிஸ் போட்டிகளில் கிடைக்கும் தனது பரிசுத் தொகை முழுவதையும் ரஷ்யப் படையெடுப்பால் பாதிக்கப்பட்ட உக்ரைன் குழந்தைகளுக்கு வழங்கவுள்ளேன் எனத் தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.





# தென்னாபிரிக்காவுடனான போட்டியில் பங்களாதேஷ் அணிக்கு வெற்றி




தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் பங்களாதேஷ் அணி 38 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என்ற கணக்கில் பங்களாதேஷ் அணி முன்னிலை பெற்றுள்ளது. செஞ்சூரியனில் நேற்று நடைபெற்ற இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட பங்களாதேஷ் அணி, 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 314 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகப்பட்ச ஓட்டங்களாக, சகிப் அல் ஹசன் 77 ஓட்டங்களையும் லிடொன் தாஸ் மற்றும் யசிர் அலி ஆகியோர் தலா 50, அணித்தலைவர் தமிம் இக்பால் 41 ஓட்டங்களையும் எடுத்தனர். தென்னாபிரிக்க அணியின் பந்துவீச்சில் மார்கோ ஜான்சென் மற்றும் மஹராஜ் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 315 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய தென்னாபிரிக்க அணி, 48.5 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 276 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்க, பங்களாதேஷ் அணி 338 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. வன்டெர் டுஸன் 86 ஓட்டங்களையும் டேவிட் மில்லர் 79 ஓட்டங்களையும் எடுத்திருந்தனர். பங்களாதேஷ் அணியின் மெயிடி ஹசன் 4 விக்கெட்டுக்களையும் தஸ்கின் அஹமட் 3, சொரிபுல் இஸ்லாம் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக பங்களாதேஷ் அணியின் சகிப் அல் ஹசன் தெரிவுசெய்யப்பட்டார்.

இரு அணிகளுக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் போட்டித்தொடரின் இரண்டாவது போட்டி நாளை நடைபெறவுள்ளது.


# இங்கிலாந்துடனான டெஸ்ட் போராடுகிறது மே.இ.தீவுகள்

*இங்கிலாந்து அணியுடனான இரண்டாவது டெஸ்ட் போட்டியின் மூன்றாம் நாள் ஆட்ட நிறைவில் தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிவரும் மேற்கிந்தியத் தீவுகள் அணி 4 விக்கெட்டுக்களை இழந்து 288 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. கிரெய்க் பிரத்வைய்ட் 109 ஓட்டங்களுடனும் அல்சாரி ஜோசப் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.*

*பார்படோஸில் நடைபெற்றுவரும் இந்தப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 9 விக்கெட்டுக்களை இழந்து 507 ஓட்டங்களை பெற்றுக்கொண்ட நிலையில் தனது முதல் இன்னிங்ஸை நிறைவுசெய்துகொண்டது. அணித்தலைவர் ஜோ ரூட் 153 ஓட்டங்களையும் பென் ஸ்டோக்ஸ் 120 ஓட்டங்களையும், டான் லோரன்ஸ் 91 ஓட்டங்களையும் பெற்றனர். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் வீரசமி பெருமாள் 3 விக்கெட்டுக்களையும் கெமர் ரோச் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.*

*இதனைத்தொடர்ந்து தனது முதல் இன்னிங்ஸை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி கிரெய்க் பிரத்வைய்ட், ஜெர்மைன் ப்ளக்வூட் இருவரதும் சதங்களின் உதவியோடு 288 ஓட்டங்களைச் சேர்த்திருக்கிறது. ஜெர்மைன் ப்ளக்வூட் 102 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். வீழ்த்தப்பட்ட நான்கு விக்கெட்டுக்களை இங்கிலாந்து அணியின் மத்யு பிர், ஜக் லீச், பென் ஸ்டோக்ஸ், டான் லோரன்ஸ் ஆகியோர் தலா ஒன்று வீதம் கைப்பற்றினர்.*

*இன்று போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் நடைபெறுகிறது.*




# ஐ.பி.எல். தொடரிலிருந்து விலகினார் மார்க் வுட்




15 ஆவது ஐ.பி.எல். தொடர் வருகிற 26 ஆம் திகதி மும்பையில் தொடங்கவிருக்கிறது. முதல் போட்டியில் சென்னை -கொல்கத்தா அணிகள் மோதவிருக்கின்றன.

தொடர் ஆரம்பமாக சில தினங்களே உள்ள நிலையில், லக்னோ அணியில் விளையாட ஒப்பந்தமாகியிருந்த இங்கிலாந்தின் வேகப்பந்துவீச்சாளர் மார்க் வுட் காயம் காரணமாக விலகியுள்ளார். இது அந்த அணிக்குப் பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

கடந்த மாதம் நடந்த ஐ.பி.எல். ஏலத்தில் லக்னோ அணி 7.5 கோடிக்கு மார்க் வுட்டை ஏலத்தில் எடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பாடசாலை பரீட்சை வினாத்தாள் தயாரிக்கும் கடதாசிக்கு மேல்மாகாணத்தில் தட்டுப்பாடாம்!

## பரீட்சைகள் நடைபெறும் திகதிகளில் மாற்றம்

மேல் மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் இறுதித் தவணைப்பரீட்சைகள் தாமதப்படுத்தப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாண கல்விப் பணிப்பாளரால் இதுதொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சை வினாத்தாள்களைத் தயாரிப்பதற்கான கடதாசி மற்றும் ஏனைய பொருள்களில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாடே இதற்குக் காரணமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 6 ஆம், 7 ஆம், 8 ஆம் வகுப்புகளுக்கான இறுதித் தவணை கால அட்டவணையில் திருத்தம் செய்யப்பட்டு, 4 ஆம், 9 ஆம், 10 ஆம், 11 ஆம் வகுப்புகளுக்கான இறுதித் தவணை பரீட்சைத் திகதிகளுக்கு மாற்றம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஒரு வாகனத்திற்கு 10 லீற்றர் டீசல் மாத்திரமே விநியோகிக்கப்படுமாம்!

கொழும்பு மாவட்டத்திலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் டீசல் விநியோகத்திற்கு புதிய கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வாகனம் ஒன்றுக்கு 10 லீற்றர் டீசல் மாத்திரமே வழங்கப்படவுள்ளதாக எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

தற்போது கொழும்பில் எரிபொருள் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில் உள்ள ஒவ்வொரு எரிபொருள் நிரப்பு நிலையத்திலும் வாகனம் ஒன்றுக்கு 10 லீற்றருக்கு மேல் டீசல் வழங்கக் கூடாதென இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் பிராந்திய முகாமையாளர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். இறுதியாக வந்த கப்பலிலுள்ள டீசலை சப்புகஸ்கந்தவில் சேமித்து வைக்க முடியாததே இந்தப் பிரச்சினைக்குக் காரணம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

போக்குவரத்து நெரிசல் காரணமாக டீசல் கப்பலில் இருந்த டீசலை முத்துராஜவெலயில் இறக்க வேண்டிய நிலை ஏற்பட்டதுடன், இந்த நிலைமையிலேயே தற்போது பிரச்சினை உருவாகியுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது.



# அரசியல் வங்குரோத்தை மறைக்க சமுர்த்தி கருவியாக பயன்பட்டது

## என்கின்றார் அமைச்சர் டலஸ்

ஒவ்வொரு ஆளும் தரப்பின் அரசியல் வங்குரோத்து நிலையை மூடிமறைக்கும் கருவியாக சமுர்த்தி அபிவிருத்தி வேலைத்திட்டம் பயன்படுத்தப்பட்டதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும குற்றம் சுமத்தியுள்ளார்.

வெலிகமவில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அமைச்சர், மேற்படி திட்டம் நாட்டின் வரலாற்றில் மிகவும் பாரியளவில் அரசியல்மயப்படுத்தப்பட்ட அரச வேலைத் திட்டங்களில் ஒன்று என்றும் தெரிவித்துள்ளார்.

சமுர்த்தி வேலைத்திட்டம் அதன் உத்தேசிக்கப்பட்ட இலக்குகளை அடையத் தவறியுள்ள அதேவேளை கொரோனாத் தொற்றுக்கு மத்தியில் பொதுமக்களுக்கு வழங்கிய சேவையையும் அவர் நினைவுகூர்ந்தார்.

ஒட்டுமொத்த பொதுமக்களையும் பாதிக்கும் வகையில் வரலாற்றில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ளதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நெருக்கடிகளால் அதிகம் பாதிக்கப்பட்டவர்கள் சமுர்த்தி பயனர்களே என்றும் ஆகவே மேற்படி வேலைத்திட்டத்தின் நோக்கங்களைப் பாதுகாக்கும் வகையில் அனைவரும் செயற்பட வேண்டும் என்றும் அழைப்பு விடுத்தார்.




# நமக்காகவும், நம்மவர்களுக்குமாக 100 நாள்கள் நடை பயணம் ஆரம்பம்

## மட்டக்களப்பில் தொடக்கி வைப்பு



இன்று மட்டக்களப்பில் மாற்றுத்திறனாளிகளும், தொண்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்களும் விளையாட்டுக் கழகங்களைச் சேர்ந்தவர்களும் இணைந்து 100 நாள்கள் நடைபெறவுள்ள மனிதநேய நடையை ஆரம்பித்து வைத்தார்கள்.

தாம் நிர்ணயிக்கும் தூர இலக்கை அது ஒரு நாளைக்கு '10,000' அடிகளாகவோ '5,000' அடிகளாகவோ '3,000' அடிகளாகவோ இருக்கலாம். அந்த இலக்கை 100 நாள்கள் தொடர்ந்து நடக்கும் ஒரு சவாலான மனித நேய நடையில் (Charity Walk இல் ) DATA Charity கடந்த வருடத்தில் இருந்து நடத்தி வருகின்றது. .

மாற்றுத்திறனாளிகளை பேசு பொருளாக்கும் பெரும் நோக்கோடு நடத்தப்படுகின்ற Tamil Para Sports

இந்த முறை மட்டக்களப்பில் ஓகஸ்ட் 20 இல் நடக்க இருக்கின்றது. அதனை முன்னிட்டு இந்த நடை பயணம் நடக்கின்றது.

இந்த நடை பயணத்தில் யாரும் இணைந்து கொள்ளலாம். நீங்களே உங்கள் நடையின் அளவை நிர்ணயித்துக் கொள்ளலாம்.

அதன் பின்னர் 100 நாள்கள் நடக்க வேண்டும். அதுதான் இந்த நடையின் இலக்கு.

இந்த நடையின் ஆரம்ப நிகழ்வு மட்டக்களப்பில் சின்னாஸ்பத்திரி சந்தியிலிருந்து Tamil Para Sports எனும் மாபெரும் நிகழ்வு நடைபெற இருக்கின்ற வெபர் மைதானத்தில் நிறைவு பெற்றது.

இது தொடர்பான மேலதிக தகவல்கள் Tamil Para Sports எனும் முகப்புத்தகத்தில் காணக்கூடியதாக இருக்கிறது.

Tamil Para Sports 2022 மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதார முயற்சிக்கு உதவுதல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு நிதி திரட்டல் இந்த நடையில் ஒரு அங்கமாக இருக்கிறது ஐரோப்பா மற் றும் அமெரிக்காவிலிருந்து இந்த நடையில் ஒரு அங்கமாக இணைபவர்களை Justgiving page இல் தமக்கான ஒரு பக்கத்தை உருவாக்கி இந்த நல்ல நோக்கங்களுக்கான நிதி திரட்டலிலும் ஈடுபடுமாறு அன்போடு கேட்கப்படுகின்றனர். பகிரங்கமான ஒரு இணையதளத்தில் இந்த நிதி திரட்டப்படுகிறது இந்த நிதி அனைத்தும் Tamil Para Sports மற்றும் மாற்றுத்திறனாளிகளின் வாழ்வாதார முயற்சிகளுக்கு உபயோகிக்கப்படும்.

லண்டனை தளமாகக் கொண்டு இயங்கும் Diabetes UK எனும் Charity இதே போன்ற ஒரு நடையினை சென்ற வருடத்திலிருந்து ஆரம்பித்து நடத்துகிறார்கள். சர்க்கரை நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நடைப் பயிற்சியை தொடர்ந்து ஊக்குவிக்கும் முகமாக இந்த நடையை அவர்கள் நடத்துகிறார்கள். பிரிட்டனில் வாழும் பலர் அதில் கலந்து கொண்டு 100 நாள்கள் நடக்கிறார்கள் அந்த 100 நாள்கள் நடக்கின்ற போது அவர்களின் உடல்களில் ஏற்படுகின்ற மாற்றங்களையும் அவர்கள் பகிரங்கமாகப் பகிர்ந்து வருகின்றார்கள்.

இதேபோன்ற நடையை தமிழ் மக்களிடமும் கொண்டு செல்லும் நோக்கோடு இந்த நடை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடைப்+ பயிற்சியால் உண்டாகும் மாற்றங்களை உங்கள் மருத்துவர்களிடம் கேட்டு தெரிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு ஒவ்வொரு நாளும் எவ்வளவு தூரம் நடக்க வேண்டும் என்பதையும் உங்கள் மருத்துவரின் பரிந்துரையின்படி நடவுங்கள்.

இங்கு நாம் நமக்காகவும் நடக்கின்றோம் எமது மண்ணில் வாழும் மாற்றுத்திறனாளிகளின் நலனுக்காகவும் நடக்கின்றோம்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 19.03.2022இல் வெளியிடப்பெற்றது.